வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி 07.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150ஆம் ஆண்டை ஒட்டிய ஓராண்டுக் கொண்டாட்டங்களை, இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, வந்தே மாதரம் 150ஆம் ஆண்டு விழாவில், துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர், மாணவர்கள், மற்றும், பொது மக்களுடன் இணைந்து, வந்தே மாதரம் பாடலை பாடினர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை வாரணாசி சென்று, நாளை வாரணாசியில் இருந்து, 4 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை கொடியசைத்து தொடக்கி வைக்கிறார்.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், வடகிழக்கு பிராந்தியத்தின் பிரதான வளர்ச்சிக் கேந்திரமாக திரிபுராவை வலுப்படுத்துவதில், முக்கிய பங்காற்றி வருகின்றன.

---------------------------

*வந்தே மாதரம் 1 (18)*

வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150ஆவது ஆண்டு விழா, நாடு முழுவதும் இன்று தொடங்கி உள்ளது. இதுகுறித்து குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்தே, நாட்டின் ஒற்றுமை, மற்றும் ஒருமித்த உணர்வின் வெளிப்பாடாகத் திகழும் வந்தே மாதரம் பாடல், இனி

வரவிருக்கும் காலங்களிலும், தொடர்ந்து அவ்வாறே நீடிக்கும் என்று கூறியுள்ளார். இப்பாடலின் உணர்வுகளுக்கு ஏற்றபடி, இந்தியத் தாயை மகிழ்ச்சியாகவும், வளமாகவும் வைத்துக் கொள்ள, நாட்டு மக்கள் உறுதியேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அனைத்து மொழி, மத, மற்றும், பிராந்தியப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, மக்களை ஒன்றுபடுத்தும் சக்தியாகவும், இந்திய கலாச்சார மரபுகள், மற்றும், நாகரீக மாண்புகளை வெளிபடுத்தும் சின்னமாகவும், வந்தே மாதரம் தேச பக்திப் பாடல் திகழ்வதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், சமூக ஊடகத்தில் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், வந்தே மாதரம் தேச பக்திப் பாடல்களின் 150ஆம் ஆண்டை ஒட்டிய ஓராண்டு கொண்டாட்டங்களை தொடக்கி வைத்து பேசுகையில், வளர்ச்சிக்கான கனவுகளையும், அதை நிறைவேற்றிக் கொள்வதற்கான மன உறுதி,

*வந்தே மாதரம் 2 (17)*

மற்றும், ஆற்றலையும் நாட்டிற்கு வழங்கும் மந்திரமே வந்தே மாதரம் தேச பக்தி பாடல் என்றார். இந்தியத் தாயை போற்றும் வகையிலான இப்பாடல், நம் நினைவுகளை வரலாற்று காலத்திற்கு இட்டுச் செல்வதுடன், இன்றையத் தேவைகளை நம்பிக்கையுடன் அணுகவும், நாளைத் தேவைகளுக்கு புதிய ஆற்றல் பாய்ச்சவும், பேருதவி புரிவதாக அவர் கூறினார். வந்தே மாதரம் தேச பக்திப் பாடலை, அனைவரும் சேர்ந்து பாடுவது, இதயத்தை ஊடுருவக் கூடிய, வார்த்தைகளால் விவரிக்க முடியாத அனுபவம் என்றும், அவர் குறிப்பிட்டார். இதுகுறித்த வீடியோக்களை பொது மக்கள் பதிவேற்றம் செய்து, சான்றிதழ் பெறும் வகையிலான இணைய தளம் ஒன்றை பிரதமர் இவ்விழாவின் போது தொடக்கி வைத்தார். வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150ஆம் ஆண்டு விழாவை ஒட்டிய நினைவு தபால் தலை, மற்றும், நாணயத்தையும் அவர் வெளியிட்டார்.

தலைநகரில், இந்திராகாந்தி உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இவ்விழாவில், டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. வி.கே. சக்சேனா, மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

---------------------------

வந்தே மாதரம்-புதுச்சேரி 1 (3)

புதுச்சேரியில், வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150ஆம் ஆண்டு விழா, கலை-பண்பாட்டுத் துறை சார்பில், இன்று நடைபெற்றது. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

வந்தே மாதரம்-புதுச்சேரி 2 (15)

(வாய்ஸ்)

கம்பன் கலையரங்கில் இன்று காலை நடைபெற்ற, வந்தே மாதரம் 150ஆம் ஆண்டு விழாவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர், மாணவர்கள், மற்றும், பொது

மக்களுடன் இணைந்து, வந்தே மாதரம் பாடலை பாடினர். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம்-திரு. திருமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செல்வ கணபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, மற்றும், உயர்நிலை அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். டெல்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்ட நிகழ்ச்சியும், இவ்விழாவின் போது ஒலிபரப்பப் பட்டது. தொடர்ந்து பல்வேறு தேச பக்திப் பாடல்களும் இசைக்கப்பட்டன.

காரைக்காலில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், இன்று காலை நடைபெற்ற விழாவில், மாவட்ட ஆட்சியர் திரு. ரவி பிரகாஷ்

தலைமையில், அதிகாரிகள், ஊழியர்கள், மற்றும், பொது மக்கள் கலந்து கொண்டு, வந்தே மாதரம் தேச பக்திப் பாடலை, கூட்டாகப் பாடினர்.

*வந்தே மாதரம்-புதுச்சேரி 3 (5)*

ஏனாமில், மண்டல நிர்வாக அதிகாரி திரு. அங்கித் குமார் தலைமையில், பிஎம்ஸ்ரீ ராஜீவ் காந்தி அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற, வந்தே மாதரம் குழுப்பாடல் நிகழ்ச்சியில், பல்வேறு கல்வி நிறுவனங்களில் இருந்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதாக, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

---------------------------

*பீகார் (16)*

பீகாரில், 121 தொகுதிகளுக்கான, முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல் நேற்று முடிவடைந்த நிலையில், எஞ்சியுள்ள 122 தொகுதிகளுக்கு, வரும் 11ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, பீகாரில், அவுரங்காபாத் உள்ளிட்ட இடங்களில், தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக, தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டங்களில் உரையாற்றினார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, ஜாமுயி பகுதியிலும், பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார், கிழக்கு சம்பாரண் மாவட்டத்திலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர். மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி, மகா கட்பந்தன் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக, பங்க்கா பகுதியில், தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அராரியா மாவட்டத்தில் உள்ள ஜோக்கிஹாட் பகுதியில், மூத்த ஆர்.ஜே.டி. தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். இதற்கிடையே பீகாரில நேற்று நடைபெற்ற முதல்கட்ட சட்டமன்றத் தேர்தலில் 64.66 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

---------------------------

*மோடி வாரணாசி* (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை, வாரணாசி சென்று, நாளை வாரணாசியில் இருந்து, 4 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை கொடியசைத்து தொடக்கி வைக்கிறார்.

பனாரஸ்-கஜூராஹோ,

லக்னோ-சகாரன்பூர்,

ஃபெரோஸ்பூர்-டெல்லி, மற்றும்,

எர்ணாகுளம்-பெங்களூரு வந்தே பாரத் ரயில்கள் இதில் அடங்கும்.

பிரதமர் தொடக்கி வைக்கும் வந்தே பாரத் ரயில்கள், முக்கிய நகரங்களுக்கு இடையிலான பயண நேரத்தை கணிசமாக குறைத்து, உலகத் தரம் வாய்ந்த பயண வசதிகளை மக்களுக்கு வழங்க உள்ளன. இதில் எர்ணாகுளம்-பெங்களூரு வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில், இவ்விரு நகரங்களுக்கு இடையிலான பயணத்தை, சுமார் 2 மணி நேரம் குறைக்கும் என்பதும், முக்கிய ஐடி கேந்திரங்கள், மற்றும், வர்த்தக மையங்களை இணைக்கும் வகையிலான இந்த ரயில், மாணவர்கள், ஐடி ஊழியர்கள், மற்றும், சுற்றுலா பயணிகளுக்கு மிக பயனுள்ளதாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*ஜிஎஸ்டி – திரிபுரா 1* (6)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், திரிபுராவில், பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி –திரிபுரா 2* (17)

(வாய்ஸ்)

அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், திரிபுராவில் கிராமப்புற கைவினைக் கலைஞர்கள், விவசாயிகள், மற்றும், சிறு தொழில் நிறுவனங்கள் மிகுந்த பயன்பெற்றுள்ளன. பல்வேறு துறைகளுக்கான வரிக் குறைப்பினால், மாநிலத்தில் உள்ளூர்உற்பத்திப் பொருட்களின் விலை குறைந்து, சந்தையில் போட்டித் திறன் அதிகரித்துள்ளது. குறிப்பாக, தேயிலை பொருட்கள் மீதான 18 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், திரிபுராவில் தேயிலை துறை ஊக்கம் பெற்றுள்ளது. கைத்தறி துணி வகைகள், மற்றும், 2 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலையுள்ள ஆடைகள் மீதான ஜிஎஸ்டி, 12 சதவிகித அடுக்கில் இருந்து, 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப் பட்டுள்ளதால், மாநிலத்தில், நெசவுத் தொழிலை நம்பியுள்ள சுமார் 1 லட்சம் குடும்பங்கள் உற்சாகம் அடைந்துள்ளன. திரிபுராவின் புகழ்பெற்ற ராணி அன்னாசி, மற்றும்,இதர பழரசங்கள் மீதான வரியும், 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், சிறு அளவிலான உணவு பதனீட்டு நிறுவனங்களின் போட்டித் திறன் அதிகரித்துள்ளது. வடகிழக்கு பிராந்தியத்தின் பிரதான வளர்ச்சிக் கேந்திரமாக திரிபுராவின் நிலையை வலுப்படுத்துவதில், புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், முக்கிய பங்காற்றி வருவதில் ஐயமில்லை.

---------------------------

*முருகன்-திரைப்படம்* (18)

கோவாவில் வரும் 20ஆம் தேதி தொடங்க உள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், 81 நாடுகளில் இருந்து, 240 திரைப்படங்கள், திரையிடப்பட உள்ளன. உலக அளவிலான, திரைத் துறை படைப்பாளிகளுக்கு இடையே, முக்கிய பாலமாகவும், இந்திய சினிமாவிற்கான உலக மேடையாகவும், இவ்விழா அமையும் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு, மற்றும், தொடர்புடைய இதர தொழில்நுட்பங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட படைப்புகள் குறித்து, தனிப் பிரிவு ஒன்றும் விழாவில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.நாரி சக்தி என்னும் மத்திய அரசின் தொலை நோக்குப் பார்வையை வலுப்படுத்தும் வகையில், இவ்வாண்டு திரைப்பட விழாவில், பெண் இயக்குநர்கள் உருவாக்கிய 50க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படும் என்றும் அவர் கூறினார். திரைப்பட விழாவின் தொடக்க நாளன்று, இந்திய சினிமாவின் புகழ்மிகு வரலாற்றை கொண்டாடும் வகையில், அணிவகுப்பு நடைபெறும் என்றும், பிரபல திரைப்பட தயாரிப்பு நிறுவனங்கள், மாநில அரசுகள், மற்றும், கலைக் குழுக்கள், இந்த அணிவகுப்பில் இடம்பெறும் என்றும், தகவல்-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ தெரிவித்தார்.

---------------------------

ஹாக்கி 1 (17)

ஹாக்கி விளையாட்டில், இந்தியாவின் கடந்த கால புகழையும்,உலக ஹாக்கி அரங்கில் இந்தியாவின் தலைமைத்துவத்தையும், மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா,நினைவு கூர்ந்துள்ளார். இந்திய ஹாக்கியின் 100 ஆண்டுகளை ஒட்டி, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற விழாவில் அவர் பேசுகையில், சர்வதேசப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்று, கடினமான நேரங்களிலும் முக்கிய வெற்றிகளை ஈட்டி, நாட்டிற்கு பெருமை சேர்த்த ஹாக்கி வீரர்களின் சாதனைகளை நினைவு கூர்ந்தார். ஹாக்கி விளையாட்டில் இந்தியாவின் பாரம்பரியப் புகழை, தற்போது இந்திய ஹாக்கி அணியினர் மீட்டுள்ளதாகவும், இவர்களின் கூட்டு முயற்சிகளால், மேலும் பல வெற்றிகள் சாத்தியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு சார்பில், வரும் 28ஆம் தேதி முதல், டிசம்பர் 10ஆம் தேதி வரை, சென்னை, மற்றும், மதுரையில் நடைபெற உள்ள, ஆடவர் ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பைப் போட்டிகளுக்கான கோப்பையை, அமைச்சர் இந்நிகழச்சியின் போது வெளியிட்டார்.

மொத்தம் 24 போட்டிகளாக நடைபெற உள்ள இத்தொடரில், சுமார் 11 ஆயிரத்து 500 ஹாக்கி வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

*ஹாக்கி 2 (5)*

இன்றைய விழாவின் ஒருபகுதியாக, விளையாட்டுத் துறை அமைச்சரின் அணிக்கும், ஹாக்கி இண்டியா அமைப்பின் அணிக்கும் இடையே, கண்காட்சிப் போட்டி ஒன்றும் நடைபெற்றது. இப்போட்டியில் விளையாட்டுத் துறை அமைச்சரின் அணி, 3க்கு-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

--------------------------

*வானிலை (9)*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, திருச்சி, விருதுநகர், ராமநாதபுரம், மற்றும், தூத்துக்குடி மாவட்டங்களில், ஒரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 13ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில், 10செ.மீ மழை பதிவாகி உள்ளது.

--------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150ஆம் ஆண்டை ஒட்டிய ஓராண்டுக் கொண்டாட்டங்களை, இன்று புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்தார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, வந்தே மாதரம் 150ஆம் ஆண்டு விழாவில், துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர், மாணவர்கள், மற்றும், பொது மக்களுடன் இணைந்து, வந்தே மாதரம் பாடலை பாடினர்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை வாரணாசி சென்று, நாளை வாரணாசியில் இருந்து, 4 வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்களை கொடியசைத்து தொடக்கி வைக்கிறார்.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், வடகிழக்கு பிராந்தியத்தின் பிரதான வளர்ச்சிக் கேந்திரமாக திரிபுராவை வலுப்படுத்துவதில், முக்கிய பங்காற்றி வருகின்றன.